SHRIMATI INDIRA GANDHI COLLEGE
(Affiliated to Bharathidasan University)
Nationally Accredited at 'A' Grade (3rd Cycle) by NAAC | An ISO 9001 : 2015 Certified Institution
Tiruchirappalli - 620 002

# CIRCULAR

# AND

# UNIVERSITY COMMUNICATION

# 2022-2023

SHRIMATI INDIRA GANDHI COLLEGE
(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)
Chatram Bus Stand, Tiruchirappalli - 620 002.

... S. VIDHYALAKSHMI, M.Sc., M.Phil., B.Ed., Ph.D.,

Post Box No. 369
2701453 (Office)
2702797 (Personal)
Fax : 0431-2702797
E-mail : sigctr@gmail.com
Website : www.sigc.edu
Webmail : principal@sigc.edu

29.09.2022

## CIRCULAR TO ALL THE II & III YEAR STUDENTS

... inform you that the Mid Semester Examinations for the I Term of this ... year 2022 – 2023 will be held from **07.10.2022 (Friday)** to **15.10.2022** ... the Mid Semester Examinations will be conducted like University ... Exam in the Forenoon session will be between ... and 12.00 noon and the Afternoon session will be between 1.00 p.m. and ... **The room allotment for the examinations will be displayed on the Notice ... and you are expected to sit accordingly.** Students who have examinations ... noon session can leave (only Day scholars) the campus by 12.00 noon ... the Afternoon session (only Day scholars) by 4.00 p.m. Students need not ... the college on those days when they do not have examinations.

... are expected to prepare well for the examinations. Students should use ... (three) hours to write the exam. The marks scored will be considered for ... of Internal Assessment.

**Best Wishes!**

PRINCIPAL

**SHRIMATI INDIRA GANDHI COLLEGE**
(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)
Chatram Bus Stand, Tiruchirappalli - 620 002.

Dr. S. VIDHYALAKSHMI, M.Sc., M.Phil., B.Ed., Ph.D.,
Principal

Post Box No. 369
✆ 2701453 (Office)
2702797 (Personal)
Fax : 0431-2702797
E-mail : sigctr@gmail.com
Website : www.sigc.edu
Webmail : principal@sigc.edu

29.11.2022

## Circular
## To all I UG & I PG Programmes
## (except M.B.A,M.Phil Programmes)

The Last working Day for this semester for all the I UG & I PG Programmes (except M.B.A & M.Phil Programmes) is 03.12.2022 (Saturday). The University Examinations (Theory & Practical) will be held as per the schedule given in University Website.

The students are advised to utilize the study holidays usefully and spend the time for the preparation of examinations only.

It is the responsibility of the students to note down the correct Time Table, Session, Code No. of the Courses and Title of the Courses carefully. The Time Table will not be informed over Telephone under any circumstances. The Hall Tickets will be issued before three days of the commencement of University Examinations. The students should produce their identity cards to get their Hall Tickets from their respective Tutors.

The students are informed that they should bring Identity Cards and Hall Tickets on all days of Examinations. Malpractices in any form during Examinations are punishable.

Best Wishes!!!

29/11/2022

PRINCIPAL

PRINCIPAL
Shrimati Indira Gandhi College
Tiruchirapalli-2.

Phone : 0431-2701462

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirapalli - 620 002.

## Circular to all the UG and PG Students

This is to inform you that the Pre-Semester Examinations for this Academic year 2022-2023 will be held from **30.03.2023(Thursday)** to **13.04.2023(Thursday)**. The Pre-Semester Examinations will be conducted like University Examinations. Forenoon session will be between 9.00 a.m. and 12 noon the Afternoon session will be between 1.00 p.m. and 4.00 p.m. **The room allotment for the examinations will be displayed on the Notice Board and you are expected to sit accordingly.** Students who have examinations at the Forenoon session can leave ( only Day scholars) the campus by 12.00 noon and the Afternoon session (only Day Scholars) by 4.00 p.m. Students need not come to the college on those days when they do not have examinations.

All are expected to prepare well for the examinations. Students should use 3 (three) hours to write the exam.The marks scored will be considered for the calculation of Internal Assessment.

Best Wishes!

PRINCIPAL

✆ 2701453

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

POST BOX No. 369

Chatram Bus Stand, Tiruchirappalli - 620 002.

13-04-2023

## CIRCULAR

Today (13-04-2023) is the last working day for this academic year. Study holidays start from 14-04-23. Hall ticket issue date will be announced later through the concerned Department HoD.

13/4/23

**PRINCIPAL**

# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் 'A+'தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024

தொலைபேசி : 0431- 2407016/ 2407060
தொலை நகலி: 0431 - 2407444
மின்னஞ்சல்: coe@bdu.ac.in
வலைதளம் : www.bdu.ac.in

முனைவர் **சு.சீனிவாசராகவன்,** எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்ஸி., பிஎச்.டி.,
தேர்வு நெறியாளர் (பொ)


ந.க. எண்: தே.நெ.அ. /இளநிலைப்பட்டம்/நவம்பர் 2022/தேர்வுகள் /2022 நாள்: 07.10.2022

பெறுபவர்
முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

பொருள்: தேர்வுப் பிரிவு - நவம்பர் 2022 இளநிலை மற்றும் முதுநிலை (MBA மற்றும் MCA தவிர) மாணவர்களுக்கான தேர்வுகள் - பருவப் பாடக்குறியீடுகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கும் மற்றும் தேர்வு துவங்கும் நாள் குறித்து கால அட்டவணை அறிவித்தல் - தொடர்பாக.

பார்வை: துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்:07.10.2022

- - -

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் நவம்பர் 2022-க்கான இளநிலை மற்றும் அனைத்து முதுநிலைத் (MBA மற்றும் MCA தவிர) தேர்வுகள் முறையே 21-11-2022 (திங்கள் கிழமை) மற்றும் 28-11-2022 (திங்கள் கிழமை) ஆகிய நாட்களில் துவங்கவும், பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் (தன்னாட்சி தவிர - Non Autonomous) இருந்து மாணாக்கர்களின் பருவப் பாடக்குறியீடுகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாட்கள் குறித்த தேர்வுக் கால அட்டவணையைப் பணிக்கப்பட்டதன்படித் தெரிவிக்கப்படுகிறது.

நடப்புப் பருவம் மற்றும் நிலுவைத் தாள்களுக்கான தேர்வு கட்டணத்துடன் பட்டியல்களைச் சமர்பிக்கப்பட வேண்டிய நாள் :

| வ. எண் | விவரங்கள் | | நாள் மற்றும் கிழமை |
|---|---|---|---|
| 1. | தேர்விற்குரிய விவரங்கள் மற்றும் கட்டணத்தை மாணாக்கர்களிட மிருந்து பெற்று பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | : | 21.10.2022 வெள்ளிக்கிழமை |
| 2. | தேர்விற்கு உரிய கட்டணங்களுடன் மாணாக்கர்களின் தேர்வு கட்டண விவரப்பட்டியல் மற்றும் வங்கி ரசீதுடன் பல்கலைக் கழகத்திற்கு வந்துசேர வேண்டிய கடைசி நாள் | : | 28.10.2022 வெள்ளிக்கிழமை |
| 3. | தேர்விற்குரிய விவரங்கள் மற்றும் கட்டணத்தை மாணாக்கர்களிட மிருந்து தண்டத்தொகையுடன் (ரூ.300 + 18% GST) பெற்று பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | : | 31.10.2022 திங்கள் கிழமை |
| 4. | தண்டத்தொகையுடன் (ரூ.300 + 18% GST) பெற்று பதிவேற்றம் செய்யப்பட்ட மாணாக்கர்களின் தேர்வுக் கட்டண விவரப்பட்டியல் மற்றும் வங்கி ரசீதுடன் பல்கலைக்கழகத்திற்கு வந்துசேர வேண்டிய கடைசி நாள் | : | 02.11.2022 புதன் கிழமை |
| 5. | 02.11.2022-க்குப் பிறகு கூடுதல் தண்டத்தொகையுடன் (ரூ.300+500=800+18% GST) உடன் மாணாக்கர்களின் தேர்வுக் கட்டண விவரப்பட்டியல் வங்கி ரசீது மற்றும் வருகைப்பதிவு சான்றிதழுடன் பல்கலைக் கழகத்திற்கு நேரில் வந்து பதிவேற்றம் செய்திட கடைசி நாள் | : | 05.11.2022 சனிக்கிழமை |

| | | | |
|---|---|---|---|
| 6. | மாணாக்கர்களின் வருகைப்பதிவு தொடர்பான (Convocation) படிவங்கள் மற்றும் உரிய கட்டண விவரங்களுடன் பல்கலைக் கழகத்திற்கு வந்துசேர வேண்டிய கடைசி நாள் | : | 05.11.2022 **சனிக்கிழமை** |
| 7. | தேர்வு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டியவர்கள் | | |
| | 7.1 2022-க்கு முன்னர் கல்லூரியை முடித்து நிலுவைத் தாள்கள் உள்ளவர்கள் | | |
| | 7.2 மறுசேர்க்கை (Re-admission) / மீளச்சேர்க்கை (Re-do) பெற்றுள்ளவர்கள் | | |
| | 7.3 தொலைக்கல்வி மையம், தன்னாட்சி கல்லூரிகள் மற்றும் பிற பல்கலைக் கழகங்களிலிருந்து மாற்றுச் சேர்க்கை (Transfer admission) பெற்றவர்கள் | | |
| | 7.2 மற்றும் 7.3இல் உள்ளவர்கள் தேர்வு விண்ணப்பங்களுடன் பதிவாளரின் அனுமதிக் கடிதம் மற்றும் கூடுதல் தாள்கள், மாற்றுத் தாள்கள் குறித்த கடித நகல்கள் இணைக்கப்பட வேண்டும். | | |
| 8. | இளநிலைத் தேர்வுகள் துவங்கும் நாள் | : | 21.11.2022 திங்கள் கிழமை |
| 9. | முதுநிலைத் தேர்வுகள் துவங்கும் நாள் | : | 28.11.2022 திங்கள் கிழமை |

மேலும், 2022-இல் சேர்க்கை பெற்ற மாணாக்கர்கள் பற்றிய சுயவிவரங்களையும், (Bio-data) பாடக்குறியீடு (Subject code) விவரங்களையும், 2021 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் சேர்க்கை பெற்ற மாணாக்கர்களின் நடப்பு மற்றும் நிலுவைத்தாள்களின் பாடக்குறியீடு (Subject code) விவரங்களையும் இணையதளத்தில் (exams1.bdu.ac.in) பதிவேற்றம் செய்ய வேண்டும்.

பல்கலைக்கழக இணையதளத்தில் (Web-Portal) பதிவேற்றம் செய்யும் மாணாக்கர்களின் பெயர், பெயரின் தலைப்பெழுத்து (Initial) மற்றும் பிறந்த நாள் (Date of Birth) போன்ற விவரங்களை +2 மதிப்பெண் பட்டியலின்படியே பதிவேற்றம் செய்யப்படவேண்டும்.

மேலும், மாணாக்கர்களின் பெயர்கள் மற்றும் இதர தரவுகளில் நுழைவுச் சீட்டு (Hall Ticket), பருவத்தேர்விற்கான பதிவுப்பட்டியல் (Galley), தேர்வு முடிவுகள் (Result) ஆகியவற்றில் ஏதேனும் தவறுகள் இருப்பின் அவற்றை உடனடியாக சரிசெய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் அனைத்து மாணவர்களும் நடப்புப் பருவத் தேர்வுகளை எழுதக் கட்டாயம் பதிவு செய்திடல் வேண்டும். அவ்வாறு நடப்புப் பருவத் தேர்வுக்குப் பதிவு செய்யத் தவறினால், அம்மாணவர்கள் அடுத்த பருவத் தேர்விற்கு பதிவு செய்ய இயலாத நிலை ஏற்படும். விடுபட்ட பருவத்தை மீளப் பயிலுதல் (Re-do) என்ற வகையில் ஆறு பருவங்களும் முடித்த பிறகு, படிக்க நேரிடும் என்ற தகவல் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், கல்லூரியில், முந்தைய பருவத் தேர்விற்குப் பதிவு செய்ய இயலாத மாணவர்கள் குறித்து, அடுத்து வரும் பருவத் தேர்விற்கு இணையதளத்தில் (Portal) பதிவுசெய்ய வேண்டுமெனில், பதிவாளரிடமோ / தேர்வு நெறியாளரிடமோ அனுமதியைப் பெற்ற பின்னரே பதிவுசெய்ய இயலும்.

மேலும், இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் மாணாக்கர்களின் பாடக்குறியீட்டு விவரங்கள் மற்றும் கட்டண விவரங்களைப் பதிவிறக்கம் செய்து, அனைத்து இளநிலை (B.A., B.B.A., B.Com., B.Lit., and B.Sc) மற்றும் அனைத்து முதுநிலைப் (MBA மற்றும் MCA தவிர) பாடவாரியாக இணையத்தில் பதிவேற்றப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் தேர்வுக் கட்டண விவரங்களின் கூட்டுத்தொகை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்படும் Form–I-இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் தேர்வுக் கட்டண விவரங்களின் கூட்டுத்தொகையுடன் சரியாக இருக்க வேண்டும். மேலும், Form–I-வாரியான சுருக்கப்பட்டியலின் (Abstract) கூட்டுத்தொகையும், வங்கியில் செலுத்தப்படும் கட்டணத்தொகையையும் நேர்செய்து பல்கலைக்கழக இணையதள வங்கிக் கணக்கில் செலுத்திய ரசீது நகலையும் இணைத்து அனுப்பிவைக்க முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் கல்லூரியில் பயிலும் / தேர்வு எழுதும் மாணாக்கர்களின் வருகைப்பதிவு (Attendance) சதவீத விபரங்களை இணையதளத்தில் (Web-Portal) பதிவேற்றம் செய்ய முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. **(Form – II, Form – III, Form – IV)**

மேலும், வருகைப்பதிவு சதவீத குறைவுக் கட்டண (Condonation Fee) விவரங்களுடன் இணையதள வங்கிக் கணக்கில் செலுத்திய ரசீதையும், தேவையானவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் நகலையும் இணையதளத்தில் (Portal) பதிவேற்றம் செய்து அந்நகல்களுடன் வருகைப்பதிவுக் குறைவுடைய மாணாக்கர்கள் யாரும் இல்லாவிடில் 'வருகைப்பதிவுக் குறைவு இல்லை' என்று துறைவாரியாக பட்டியலைத் தயார் செய்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்க முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், 2020-2021, 2021-2022 மற்றும் 2022-2023ஆம் ஆண்டுகளில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளுக்கு ஆண்டுவாரியாக, பல்கலைக்கழகத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் கூடுதல் இடங்களின் எண்ணிக்கை குறித்தும், அவ்விடங்களில் சேர்க்கை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறித்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்திசெய்து (Form-V), அனுப்பி வைக்க முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், Form-V உடன் ஆண்டுவாரியாக (year wise) பல்கலைக்கழகத்திடமிருந்து கல்லூரி பெற்றுள்ள தற்காலிக இணைவு நீட்டிப்பு ஆணை (Extension of Provisional Affiliation), கூடுதல் இடங்கள் (Additional Seats) பெற்றுள்ளதற்கான ஆணை மற்றும் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியுள்ள மாணாக்கர்களின் சேர்க்கை கட்டண சுருக்கப்பட்டியல் (Abstract) மற்றும் இணையதள வங்கிக் கணக்கில் செலுத்திய ரசீது நகலையும் / வங்கி வரைவோலை விவரங்களின் நகல்களுடன் (Copies) இணைத்து கட்டாயம் அனுப்பிவைக்க முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், பல்கலைக்கழக இணையதளத்தில் (www.bdu.ac.in) Academic > Regulations பகுதியில் வெளியிடப்பட்டுள்ள மாணாக்கர்களுக்கான கல்விக்காலம் குறித்த தகவலில், **2018-2019ஆம் கல்வி ஆண்டுக்கு முன்னர் பயின்ற மாணாக்கர்கள் மீளச்சேர்க்கை/மறுசேர்க்கை(Re-do/ Re-admission) என்ற வகையில் கல்லூரிகளில் சேர்ந்து 30-06-2023-க்குள் தங்களின் படிப்பை முடித்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ள தகவலை கல்லூரி அறிவிப்புப்பலகையில் தனியே வெளியிட முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்குத் தேர்வு எழுதுவதற்கு உதவியாளர் (Scribe) நியமனம் செய்தல் மற்றும் பகுதி-2 (Part-II) ஆங்கிலம் மொழிப்பாடத்திற்கு விலக்குப் பெற்றுள்ள விவரங்களுடன், அம்மாணாக்கர்கள் குறித்த பட்டியலைத் தனியே அனுப்பிவைக்க முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், மீளப் பயிலுதல் (Re-do), மறுசேர்க்கை (Re-admission) மற்றும் மாற்றுச் சேர்க்கை (Transfer) பெறும் மாணவர்களின் அனுமதிக் கடிதத்துடன் தேர்வுக் கட்டணங்களையும், விண்ணப்பங்களையும் அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், எக்காரணம் கொண்டும் இளநிலைப் பட்டத் (UG) தேர்வுக் கட்டணத்துடன் முதுநிலைப் பட்டத் (PG) தேர்வுக் கட்டணத்தைச் சேர்த்துச் செலுத்தக்கூடாது.

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள், உண்மையுள்ள,

தேர்வு நெறியாளர் (பொ)

<u>இணைப்பு:</u> **Forms I, II, III, IV, V** மற்றும் மாணாக்கர்களுக்கான கல்விக்காலம்

நகல்: 1. மந்தனப் பிரிவு-1, மந்தனப் பிரிவு-2, கணினிப் பிரிவு, கணக்குப்பிரிவு – தேர்வுப்பிரிவு
2. இயக்குநர் (பொ), தகவல் தொழில்நுட்ப மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி – 620 024.

# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் 'A+'தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024**

தொலைபேசி : 0431- 2407016/ 2407060
தொலை நகலி: 0431 - 2407444
மின்னஞ்சல்: **coe@bdu.ac.in**
வலைதளம் : **www.bdu.ac.in**

முனைவர் **சு.சீனிவாசராகவன்**,எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்ஸி., பிஎச்.டி.,
தேர்வு நெறியாளர் (பொ)


ந.க. எண்: பா.ப./தே.நெ.அ./இ.நி. மற்றும் மு.நி.பட்டம்/ஏப்ரல் **2023/தேர்வுகள் /2023** நாள்: **23.03.2023**

பெறுபவர்

முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

பொருள்: தேர்வுப்பிரிவு - ஏப்ரல் 2023–ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டத் (UG & PG) தேர்வுகளுக்கு தேர்வுக்கட்டணங்கள் செலுத்த வேண்டிய கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் தெரிவித்தல் தொடர்பாக.

பார்வை:
1. பாரதிதாசன் பல்கலைக்கழக இணையதளத்தில் Academic > Regulations பகுதியில் வெளியிடப்பட்டுள்ள மாணாக்கர்களுக்கான கல்விக்காலம் குறித்த தகவல்
2. துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்:23.03.2023

--------

பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட தன்னாட்சி பெறாத (Non Autonomous) கல்லூரி இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட (UG & PG) மாணாக்கர்களுக்கு ஏப்ரல் 2023-க்கான இருமைப் பருவத் தேர்வுகள் தொடர்பாக மாணாக்கர்களின் தேர்வு தொடர்பான விவரங்களைப் பல்கலைக்கழக இணையதளத்தில் (Web-Portal) பதிவேற்றம் செய்வதற்கும், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் கட்டணவிவரப் பட்டியல்கள் பல்கலைக்கழத்திற்கு வந்து சேர வேண்டிய நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் ஆகியவை குறித்த கால அட்டவணை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும், இத்துடன் **இணைக்கப்பட்டுள்ள (ஏப்ரல் 2022) கட்டணங்களையே மாணாக்கர்களிடமிருந்து பெறப்பட வேண்டும்.**

| வ. எண் | விவரங்கள் | | நாள் மற்றும் கிழமை |
|---|---|---|---|
| 1. | ஏப்ரல் 2023 தேர்வு தொடர்பான அனைத்து விவரங்களையும் பல்கலைக்கழக Portal-ல் பதிவேற்றம் செய்யத் தொடக்கநாள் | : | 27.03.2023 திங்கள் கிழமை |
| 2. | பருவத் தேர்விற்குரிய கட்டணங்களை மாணாக்கர்கள் (தண்டத்தொகை இல்லாமல்) செலுத்தக் கடைசி நாள் | : | 05.04.2023 புதன் கிழமை |
| 3. | பருவத் தேர்விற்குரிய கட்டணங்களை மாணாக்கர்கள் தண்டத் தொகையுடன் **ரூ.300 + 18% GST (ரூ.354/-)** செலுத்தக் கடைசி நாள் | | 10.04.2023 திங்கள் கிழமை |
| 4. | ஏப்ரல் 2023 தேர்வு தொடர்பான அனைத்து விவரங்களையும் பல்கலைக்கழக Portal-ல் பதிவேற்ற செய்ய கடைசி நாள் | : | 10.04.2023 திங்கள் கிழமை |
| 5. | மாணாக்கர்களின் தேர்வு கட்டண விவரப்பட்டியல் மற்றும் வங்கி ரசீதுடன் சரிபார்ப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நகல்களுடன் பல்கலைக்கழகத்திற்கு வந்துசேர வேண்டிய கடைசி நாள் | : | 12.04.2023 புதன் கிழமை |
| 6. | தேர்வு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டியவர்கள் | | |
| | 6.1 2019-க்கு முன்னர் கல்லூரியை முடித்து, நிலுவைத் தாள்கள் உள்ளவர்கள் | | |
| | 6.2 மறுசேர்க்கை (Re-admission), மீளச்சேர்க்கை (Re-do) பெற்றுள்ளவர்கள் | | |
| | 6.3 தொலைக்கல்வி மையம், தன்னாட்சி கல்லூரிகள் மற்றும் பிற பல்கலைக் கழகங்களிலிருந்து மாற்றுச் சேர்க்கை (Transfer admission) பெற்றவர்கள் | | |
| | 6.2 மற்றும் 6.3இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் தேர்வு விண்ணப்பங்களுடன் பதிவாளரின் அனுமதிக் கடிதம் மற்றும் கூடுதல் தாள்கள், மாற்றுத் தாள்கள் குறித்த கடித நகல்கள் இணைக்கப்பட வேண்டும். | | |
| 7. | இளநிலைப் பாடத் தேர்வுகள் துவங்கும் நாள் | : | 24.04.2023 திங்கள் கிழமை |
| 8. | முதுநிலைப் பாடத் தேர்வுகள் துவங்குள் நாள் **(MCA மற்றும் MBA தவிர)** | | 03.05.2023 புதன் கிழமை |

பல்கலைககழக மானியக்குழுவின் (UGC) விழிகாட்டுதலின்படி, பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிக்குழு (நாள்:15.03.2018) ஒப்புதல் அளித்துள்ளபடி 2018-2019 கல்வியாண்டு முதல் அமுல்படுத்தப் பட்டுள்ள இளநிலை/முதுநிலை பயில்திட்ட கல்விக்காலத்தின்படி, (Uniform Span Period) 2018-19-ல் சேர்க்கை பெற்றவர்களுக்கும், அதற்கு முன்பு கல்லூரிகளில் சேர்ந்திருந்த மாணாக்கர்களுக்கு படிப்பை முடித்துக்கொள்ள அளிக்கப்பட்டிருந்த ஐந்தாண்டு காலமும் வருகிற 30.06.2023-ல் முடிகிறது என்ற தகவல் தெரிவிக்கப்படுகிறது. (பல்கலைக்கழக இணையதளத்தில் Academic > Regulations பகுதியில் வெளியிடப்பட்டுள்ளது)

மேற்கண்ட தகவலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் சுற்றறிக்கை வாயிலாகவும் கல்லூரி அறிவிப்புப்பலகையிலும் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், 2019-லிருந்து சேர்க்கை பெறும் மாணாக்கர்களின் தேர்வு விவரங்களைப் பல்கலைக்கழக இணையதளத்தில் (Web-Portal) கல்லூரிகளால் பதிவேற்றம் செய்யப்படுகிறது. மாணாக்கர்கள் குறித்த தரவுகளை பதிவேற்றும் செய்யும்பொழுது, மாணாக்கர்களின் பெயர், தலைப்பெழுத்து (Initial) மற்றும் பிறந்த நாள் (Date of Birth) போன்ற விவரங்களை **+2** மதிப்பெண் பட்டியலின்படியே பதிவேற்றம் செய்யப்படவேண்டும்.

அதில் ஏற்படும் சில தட்டச்சுத் தவறுகளை (Typical Error), பல்கலைக்கழகத்திலிருந்து பருவத்தேர்விற்கான அனுமதிப் பதிவுப்பட்டியல் (Galley) / தேர்வு முடிவுகளை (Result) கல்லூரிகள் பெற்றவுடன், சரிபார்த்து அத்தவறுகளை, இணையதளத்தில் (Web-Portal) நீக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள துறைத் தலைவர்கள் மற்றும் முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், **கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் அனைத்து மாணவர்களும் அந்தந்த பருவத் தேர்வுகளை எழுதக் கட்டாயம் பதிவு செய்திடல் வேண்டும். மேலும், அந்தந்த நடப்பு (current) பருவத் தாள்கள் மற்றும் நிலுவைத் தாள்கள் (Arrears) இருப்பின் அனைத்து நிலுவைத்தாள்களுக்கும் சேர்த்து கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.**

மேலும், அவ்வாறு நடப்பு தேர்வுக்குப் பதிவுசெய்யத் தவறினால், அம்மாணவர்கள் அடுத்த பருவத் தேர்விற்கு பதிவுசெய்ய இயலாத நிலை ஏற்படும். ஆறு பருவங்களும் முடித்த பிறகு, விடுபட்ட பருவத்தை மீளப் பயிலுதல் (Re-do) என்ற வகையில், படிக்க நேரிடும் என்ற தகவல் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், கல்லூரியில், முந்தைய பருவத் தேர்விற்குப் பதிவு செய்ய இயலாத மாணவர்கள் குறித்து, அடுத்து வரும் பருவத் தேர்விற்கு இணையதளத்தில் (Web-Portal) பதிவுசெய்ய வேண்டுமெனில், பதிவாளரிடமோ / தேர்வு நெறியாளரிடமோ அனுமதியைப் பெற்ற பின்னரே பதிவுசெய்ய இயலும்.

மேலும், 2019-லிருந்து தேர்வு விவரங்களை இணையதளவழியாகவே பெற்று வருவதால், தேர்வுக் கட்டண விவரங்களையும் இணையதளத்தில் பதிவு செய்யவும், மாணாக்கர்களின் பட்டியலைத் தேர்வுக் கட்டணவிவரங்களுடன் தனித்தனியே இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப் பாடவாரியாகவும், பருவம் வாரியாகவும் **Form–I-ஐ** அனுப்பிவைக்க வேண்டி முதல்வர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், கல்லூரியில் பயிலும் / தேர்வு எழுதும் மாணாக்கர்களின் வருகைப்பதிவு (Attendance) விபரங்களை இணையதளத்தில் (Web-Portal) பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும், வருகைப்பதிவுக் குறைவு இருப்பின் கட்டண (Condonation Fee) விவரங்களுடன் **Form – II, Form –III, Form–IV** உரிய படிவங்களிலும், வருகைப்பதிவுக்குறைவு கட்டணம் எதுவும் இல்லை எனில், அதுகுறித்து ‘இல்லை’ என்று குறிப்பிட்டு சான்றையும் அனுப்பிவைக்க வேண்டித் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், 2020-2021, 2021-2022 மற்றும் 2022-2023ஆம் ஆண்டுகளில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளுக்கு ஆண்டுவாரியாக, பல்கலைக்கழகத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் கூடுதல் இடங்களின் எண்ணிக்கை குறித்தும், அவ்விடங்களில் சேர்க்கை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறித்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்திசெய்து **Form-V-ஐ** அனுப்பி வைக்க வேண்டுமென கல்லூரி முதல்வர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், மேற்குறித்த **Form-I** முதல் **Form-V-** வரை அனைத்து படிவங்களையும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சரிபார்ப்புப் பட்டியலின்படி அனைத்து நகல்களுடன் இணைத்து 12-04-2023-க்குள் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டி முதல்வர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், மீளப் பயிலுதல் (Re-do), மறுசேர்க்கை (Re-admission) மற்றும் மாற்றுச் சேர்க்கை (Transfer) பெறும் மாணவர்களின் தேர்வுக் கட்டணங்களையும், விண்ணப்பங்களையும் பதிவாளரின் அனுமதிக் கடிதம் மற்றும் கூடுதல் தாள்கள், மாற்றுத் தாள்கள் குறித்த கடித நகல்களை இணைத்துத் தனியாக முதல்வரின் கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென கல்லூரி முதல்வர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், மாணவர்களுக்கான செய்முறைத் தேர்வு அக மற்றும் புறத் தேர்வு மதிப்பெண்களையும், (Internal & External Exam Marks) எழுத்துத் தேர்வுகளுக்கான அக மதிப்பெண்களையும், இறுதிப் பருவம் பயிலும் மாணவர்களின் பகுதி-5-கூடுதல் செயல்பாடுகளுக்கு (Part-V-Extension Activities) அளிக்கப்படும் தரமதிப்பீடுகளை (Grade) இணையதளத்தில் (Portal) பதிவேற்றம் செய்ய வேண்டுமென கல்லூரி முதல்வர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், கல்லூரிகள் பல்கலைக்கழக இணையதளத்தில் (Web-Portal) பதிவேற்றம் செய்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கப்படும் அனைத்துப் தரவுகளையும் உரிய படிவங்களில் அலுவலக நகலாகப் **(Office Copies)** தங்களின் கல்லூரியில் பராமரிக்கவும் வேண்டுமென முதல்வர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. (Form – I, Form – II, Form – III, Form – IV, Internal Marks and Part-V-Extension Activities).

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்குத் தேர்வு எழுதுவதற்கு உதவியாளர் (Scribe) நியமனம் செய்தல் மற்றும் பகுதி-2 (Part-II) ஆங்கிலம் மொழிப்பாடத்திற்கு விலக்குப் பெற்றுள்ள விவரங்களுடன், அம்மாணாக்கர்கள் குறித்த பட்டியலைத் தனியே அனுப்பிவைக்க வேண்டுமென கல்லூரி முதல்வர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பல்கலைக்கழகத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாளுக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலும், இளநிலைப் பட்டத் (UG) தேர்வுக் கட்டணத்தையும், முதுநிலைப் பட்டத் (PG) தேர்வுக் கட்டணத்தையும் தனித்தனியே Online -ல் செலுத்த வேண்டும். சேர்த்துச் செலுத்தக்கூடாது.

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

தேர்வு நெறியாளர் (பொ)

<u>இணைப்பு:</u> **Forms I, II, III, IV, V** மற்றும் சரிபார்ப்பப் பட்டியல்

<u>குறிப்பு:</u> தேர்வுகள் தொடர்பான தகவல்களைப் பல்கலைக்கழக இணையதளத்தில் (Website) பார்த்துத் தெரிந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (www.bdu.ac.in)

<u>நகல்:</u>
1. உதவிப்பதிவாளர், மந்தனப் பிரிவு - 1
2. உதவிப்பதிவாளர், மந்தனப் பிரிவு - 1
3. கணினி நிரலர், கணினிப் பிரிவு
4. பிரிவு அலுவலர், கணக்குப் பிரிவு
5. இயக்குநர் (பொ), தகவல் தொழில்நுட்ப மையம்

தேர்வுப் பிரிவு,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி – 620 024